# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.149/2018
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.7
(Defence
(Court

| Name | காளிஸ்வரி | -- | |
|---|---|---|---|
| Husband Name | குருசாமி | Calling | இல்லதரசி |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th day of August 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எனது மகன் பெயர் கல்யாண குமார். அவர் திருவில்லிபுத்தூரில் 10 ரூபாய் பொருள் வியாபாரம் செய்து வந்தார். கடந்த 14.06.2018 ம் தேதி காலை 08.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது எனது கணவர் போன் மூலமாக மகனுக்கு விபத்து நடந்துவிட்டதாக கூறவே நான் உடனே திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அப்போது என் மகன் உயிரோடுதான் இருந்தார். அவனுக்கு இரண்டு கால்களிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவனை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அவன் 7 நாட்கள் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தான். பின்னர் 7 நாட்கள் கழித்து அவன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டான்.பின்னர் பிரேத பரிசோதனை செய்துவிட்டு எனது மகனின் பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள். ஆம்புலன்ஸ் மூலமாக திருவில்லிபுத்தூர் கொண்டு வந்து அடக்கம் செய்துவிட்டோம். செண்பகதோப்பிற்கு என் மகனும் இன்னும் இருவரும் குளிக்க சென்றுவிட்டு திரும்ப வரும்போது ஒரு டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எனது மகனுக்கு என்ன நடந்தது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை. என் கணவருக்கு யாரோ சொன்னதாக அவர் எனக்கு போனில் சொன்னார். என் மகன் செண்பகதோப்பிற்கு சென்றது விபத்து நடந்த பிறகுதான் எனக்கே தெரிந்தது. செண்பகதோப்பு என்பது எங்கள் வீட்டிலிருந்து 10 கி.மீ இருக்கும். சுமார் அரைமணிநேரம் ஆகும். யார் யார் கூட போனார்கள் என்று எனக்கு தெரியாது. செண்பகதோப்பிற்கு செல்லும் இளைஞர்கள் குளித்துவிட்டு மகிழச்சியாக இருப்பதற்க்காகத்தான் செல்வார்கள். என் மகனும் மற்ற இருவரும் குடித்துவிட்டு செண்பகதோப்பிற்கு சென்று குளித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் வரும்போது அவர்களாகவே கிழே விழுந்துதான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பார்க்கும்போது என் மகனுக்கு காலில் மட்டுமே காயம் இருந்தது. காலில் ஏற்படும் காயத்தால் யாரும் இறந்துவிடமாட்டார்கள். வேறு உடல் ரீதியான பிரச்சனை இருந்தால்தான் காலில் காயம்பட்டால் இறந்துவிட வாய்ப்புண்டு. எதிரிக்கும் இந்த விபத்திற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th day of August 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**